RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 266 | செப்டம்பர் 30, 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ஜம்மு - காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து கோரி மீண்டும் பேரவையில் தீர்மானம்

ஸ்ரீநகர்: செப்.30-

ஜம்மு - காஷ்மீருக்கு தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரி சட்டப்பேரவையில் நேற்று தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 2019-ம் ஆண்டு காஷ் மீருக் கான சிறப்பு அந்தஸ்து (சட்டப்பிரிவு 370) நீக்கப்பட்டது. மேலும் ஜம்மு காஷ்மீர், இரு யூனியன் பிரதேசங் களாக பிரிக்கப்பட்டது.

இதன் படி ஜம்மு காஷ்மீர் சட் டப்பேர வை யுடன்கூடிய யூனியன் பிரதேசமாகவும், லடாக் பகுதி சட்டப் பேரவை இல்லாத யூனியன் பிரதேச மாகவும் உதயமாகின. கடந்த 2024-ம் ஆண்டு ஜம்மு காஷ்மீரில் நடை பெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய மாநாடு கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

முதல் வர் உமர் அப்துல்லா, ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரி வருகிறார். இதுதொடர்பாக சட்டப்பேரவையில் நேற்று சிறப்பு தீர் மானம் நிறைவேற் றப்பட்டது. இதில் 1953-ம் ஆண்டுக்கு முந் தைய அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்க வேண்டும் என்று கோரப் பட்டு உள்ளது.

அதாவது பாதுகாப்பு, வெளியுறவு கொள்கை, கரன்சி உள்ளிட்ட முக் கிய விவகாரங்களை தவிர்த்து இதர அனைத்து துறைகளிலும் காஷ்மீர் அரசு தன்னிச்சையாக முடிவு எடுக்க அதிகாரம் வழங்க வேண்டும் என்று தீர் மானத்தில் கோரப்பட்டு உள் ளது. மேலும் சட்டப்பிரிவு 370 மற் றும் 35-ஐ மீட்டெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

ஜம்மு காஷ்மீருக்கான மாநில அந்தஸ்து கோரிக்கைக்கு பாஜக



முழு ஆதரவு தெரிவித்து உள்ளது. ஆனால் தன்னாட்சி அதிகாரம் மற் றும் சிறப்பு அந்தஸ்தை மீண்டும் கோருவதற்கு பாஜக கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இதுதொடர் பாக பாஜக எம்எல்ஏக்கள் அனை வரும் நேற்று சட்டப்பேரவையின் மையப் பகுதியில் கூடி தீர்மானத் துக்கு எதிராக குரல் எழுப்பினர். அமளியில் ஈடுபட்ட எம்எல்ஏக்களை வெளியேற்ற சபாநாயகர் அப்துல் ரஹீம் ரத்தர் உத்தரவிட்டார்.

இதன்பேரில் 4 எம்எல்ஏக்களை அவைக் காவலர்கள் வெளியேற்றினர். இதன்பிறகு சட்டப்பேரவையில் தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து சட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவர் சுனில் சர்மா கூறிய தாவது: ஜம்மு காஷ்மீருக்கு உரிய நேரத்தில் மாநில அந்தஸ்து வழங் கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உறுதி அளித் துள்ளார். அவர் அளித்த வாக்குறு தியை நிச்சயம் நிறைவேற்றுவார். காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து கிடைக்க பாஜக முழு ஆதரவு அளிக்கிறது.

ஆனால் இதைச் சீர்குலைக்கும் வகையில் சட்டப்பேரவையில் தீர் மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. தன்னாட்சி அதிகாரம் கோரி கடந்த 2000-ம் ஆண்டில் முன்னாள் முதல் வர் பரூக் அப்துல்லா காலத்தில் பேர வையில் தீர்மானம் நிறைவேற்றப்பட் டது. தற்போது அதுபோன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது நாட்டு நலனுக்கு எதிரானது. இவ் வாறு அவர் தெரிவித்தார்.

முதல்வர் உமர் அப்துல்லா கூறும் போது, “தீவிரவாதம் முழுமையாக ஓய்ந்த பிறகே காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்று மத் திய அரசு கூறுகிறது. இதை ஏற்க முடியாது. உடனடியாக மாநில அந் தஸ்தை வழங்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

## “மேகேதாட்டு விவகாரத்தில் உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும்” - பழனிசாமி

சென்னை: செப்.30-

மேகேதாட்டு அணை விவகாரத்தில் மத்திய மற்றும் கர்நாடக அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்க உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில், “மேகேதாட்டு அணை அமைய உள்ள இடத்தை மத்திய அரசின் நிபுணர் குழு நேரில் பார்த்து ஆய்வு செய்துள்ளதாக கர்நாடகா முதல்வர் சிவகுமார் தெரிவித்துள்ளது கடும் கண்டனத்திற்குரியது.

இதுகுறித்து இன்னமும் தமிழக அரசு சார்பில் எந்தச் செய்தியும் வரவில்லை. கர்நாடகத்துடன் தமிழக அரசு கூட்டு சேர்ந்து



தமிழகத்தை வஞ்சிக்கும் செயலுக்குத் துணை போகிறதா என்ற கேள்வி மக்களிடத்தில் எழுகிறது.

மேகேதாட்டு அணை கட்டுமான அனுமதி கேட்டு கர்நாடக முதல்வர் சிவகுமார், மத்திய ஜல்சக்தி துறை அமைச்சரை சந்தித்துப் பேசியிருப்பதும் சந்தேகத்தை உண்டாக்குகிறது. தமிழகம், புதுச்சேரி ஒப்புதல் இல்லாமல் புதிய அணையோ, நீர் தேக்கமோ கட்ட இயலாது என்ற அரசியல் அமைப்புச் சட்டத்தை முதல்வர் அறிவாரா?

தண்ணீர் திறப்புக்கும் வாய் திறக்கவில்லை. அணை கட்ட தடுப்பதற்கு வாய் திறக்கவில்லை. கர்நாடக காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துக்கொண்டு தமிழக விவசாயிகளை வஞ்சிக்கும் தமிழக அரசுக்கும் ரீல் முதல்வருக்கும் கடுமையான கண்டனம். உடனடியாக அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி மத்திய அரசுக்கும் கர்நாடக அரசுக்கும் கடுமையான அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

கர்நாடக முதல்வரை பார்த்து பயமா? தனக்கு தானே பட்டம் சூட்டி கொண்ட தாய்மாமா என்ன செய்யப் போகிறார்?” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ‘ஜெம்’ வீரமணி வழக்கு: சாந்தி, மகேந்திர சிம்கன் ஜாமீன் மனு மீதான தீர்ப்பு தள்ளிவைப்பு

சென்னை: செப்.30-

‘ஜெம்’ வீரமணி வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சாந்தி, மகேந்திர சிம்கன் ஜாமீன் மனு மீதான தீர்ப்பை சென்னை போக்சோ நீதிமன்றம் தள்ளிவைத்துள்ளது.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக, ஜெம் கிரானைட் நிறுவன உரிமையாளர் வீரமணியும் அவருக்கு உடந்தையாக இருந்ததாக சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்கன் உள்ளிட்டோர் கடந்த ஆகஸ்ட் 28ஆம் தேதி கைது செய்யப்பட்டனர். இதே குற்றச்சாட்டில் வீரமணி உதவியாளர் கணேசன் கடந்த வாரம் கைது செய்யபட்டு சிறையில் உள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சாந்தி மற்றும் மகேந்திர சிம்கன் ஆகிய இருவரும் ஜாமீன் கேட்டு சென்னை போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களுக்கு பதிலளித்த, காவல்துறை, “வழக்கு தொடர்பான ஆதாரங்களை அழிக்க வீரமணியிடம் இருந்து சாந்தி ரூ.24 லட்சத்து 63 ஆயிரம் பணம் பெற்றுள்ளார். இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மின்னணு சாதனங்களை தடயவியல் ஆய்வு செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிகளை அடையாளம் காணப்பட வேண்டியுள்ளது.



இவர்களை ஜாமீனில் விடுதலை செய்தால் சாட்சிகளைக் கலைக்கவும், பாதிக்கப்பட்ட சிறுமிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அச்சுறுத்தவும் வாய்ப்புள்ளது. இருவரும் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல வாய்ப்புள்ளதால் இருவரின் ஜாமீன் மனுக்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்,” எனக் கூறப்பட்டுள்ளது.

ஜாமீன் மனுக்கள் மீதான விசாரணை போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.பத்மா முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதரார்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “இவர்கள் முறையாகக் கைது செய்யப்படவில்லை, கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவில்லை.

ஏற்கெனவே காவல்துறை காவலில் எடுத்து விசாரணை முடித்துள்ளனர். எனவே இதற்கு மேல் சிறையில் அடைக்க வேண்டிய தேவை இல்லை. ஜாமீன் வழங்கி நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்,” என வாதிட்டார்.

காவல்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “கைது செய்து 40 நாட்கள் வரை எத்தனை முறை வேண்டும் என்றாலும் காவல்துறை காவலில் எடுத்து விசாரிக்க முடியும். மேலும், விசாரணை ஆரம்பக் கட்ட நிலையில் உள்ளது. தற்போதைய நிலையில் ஜாமீன் வழங்க கூடாது. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்,” என வாதிட்டார்.

தனியார் தொண்டு நிறுவனம் தரப்பில் இடையீட்டு மனு தாக்கல் செய்யபட்டு, இருவருக்கும் ஜாமீன் வழங்க எதிர்ப்பு தெரிவிக்கபட்டது.

இதனையடுத்து அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் ஜாமீன் மனு மீதான தீர்ப்பை தள்ளிவைத்தார்.

## குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவதைவிட மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதே முக்கியம்: நாராயணன் திருப்பதி கருத்து

சென்னை: செப்.30-

பாஜக மாநில துணைத் தலைவர் நாராயணன் திருப் பதி நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் கூறிய தாவது: காங்கிரஸ், திமுக போன்ற கட்சிகள் தேர்தலில் தோல்வியடையும் போதெல்லாம் தேர்தல் ஆணையம், நீதித் துறை, ராணுவம் மீது குற்றம் சுமத்துகின்றன.

அந்த வகையில், தேர்தல் ஆணையர்கள் இடையே கருத்து வேறுபாடு இருப்பதாக எதிர்க்கட்சிகள் வதந்தி பரப்புகின்றன. தேர்தல் ஆணையர்கள் மூவரும் இணைந் து, ஒருமித்த கருத்துடனேயே முடிவுகளை எடுக்கின்றனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் மூலம் லட் சக்கணக்கான போலி வாக் காளர்கள் நீக்கப்பட்டு, நாட் டின் ஜனநாயகம் பலப்படுத் தப்பட்டுள்ளது.



தமிழகத் தில் ஆட்சி அமைத்த 100 நாட்களிலேயே சட்டம் - ஒழுங்கு தொடர் பான தகவல்களை, ஆர் டிஐ வரம்பில் இருந்து நீக்கு வதற்கு தவெக அரசு ரகசி யமாக முயற்சி மேற்கொண் டது சர்வாதிகாரப் போக் கு. கடும் எதிர்ப்பு வந்ததும் அந்த உத்தரவை வாபஸ் பெற்றுள்ளனர்.

அரசுப் பள்ளிகளில் பெண் குழந்தைகளுக்குப்பாது காப்பற்ற சூழல் நிலவுகிறது. ஆசிரியர்கள், ஊழியர் களாலேயே மாணவிகளுக்கு பாலியல் தொல்லைகள் ஏற்படும் சம்பவங்கள் அதிகரிக்கின்றன. இது அரசின் நிர்வாகத் தோல்வியைக் காட்டுகிறது.

தங்க மோதிரம் வழங்குவதை விட, பள்ளிகளில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதே முக்கியம். ஜெம் வீரமணி வழக்கில் பாதிக்கப்பட்ட குழந் தைகளுக்கு நீதி கிடைக்க வழக்கை உடனே சிபிஐக்கு மாற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## “திமுகவுடன் சேர்ந்து கொண்டு முதல்வர் மீது தனிப்பட்ட விமர்சனங்களை முன்வைக்கிறார் இபிஎஸ்” ஆதவ் அர்ஜுனா தாக்கு

சென்னை: செப்.30-

“திமுக-வுடன் சேர்ந்து கொண்டு முதல்வர் மீது தனிப்பட்ட விமர்சனங்களை முன்வைக்கிறார் எடப்பாடி பழனிசாமி. தற்போது, பழனிசாமியின் மகன் மிதுன்தான் அதிமுகவை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்” என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா விமர்சித்திருக்கிறார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், “திமுக ஒரு கொள்கை கட்சி என சொல்லிக் கொள்கிறது; ஆனால், திமுக எப்போதுமே கொள்கை ரீதியான பிரச்சாரத்தை உருவாக்கியது இல்லை. ஆபாசம், அவதூறு பிரச்சாரத்தைத்தான் உருவாக்கி இருக்கிறார்கள். உதயநிதி ஆபாசப் பேச்சை மட்டுமே முன்னெடுக்கிறார். திமுக-வின் ஆபாசப் பேச்சுகளை மக்கள் தூக்கி எறிவார்கள்.

தற்போது இருக்கும் அதிமுக எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்டது இல்லை. ஜெயலலிதாவிடம் விசுவாசியாக இருந்தவர்கள் அதிமுகவை விட்டு வெளியேறி விட்டார்கள். பாமக இல்லை என்றால்



அதிமுக 47 தொகுதிகளில் வென்றிருக்க முடியாது. திமுக-வுடன் சேர்ந்து கொண்டு முதல்வர் மீது தனிப்பட்ட விமர்சனங்களை முன்வைக்கிறார் பழனிசாமி.

எடப்பாடி தொகுதியில் எங்கள் வேட்பாளரை பழனிசாமி விலை கொடுத்து வாங்கி, அதிமுகவில் இணைத்துள்ளார். இது குதிரை பேரம் இல்லையா? தற்போது அதிமுகவில் இருவர் தான் இருக்கிறார்கள். ஒன்று, பழனிசாமி, மற்றொன்று அவரது மகன் மிதுன்.

தற்போது, பழனிசாமியின் மகன் மிதுன்தான் அதிமுகவை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அதிமுகவின் சொத்துகளை அபகரிக்க எடப்பாடி பழனிசாமியின் மகன் மிதுன் திட்டமிட்டுள்ளார். மகனை அரசியலுக்குக் கொண்டு வருவதற்காக உதயநிதியுடன் கைகோத்திருக்கிறார் பழனிசாமி.

பழனிசாமி தலைமையிலான அதிமுகவை மக்கள் புறக்கணித்துள்ளார்கள். திமுகவின் பிரச்சாரத்தை பழனிசாமி மேற்கொள்கிறார்; திமுகவின் தலைவர் மு.க.ஸ்டாலின். திமுகவின் பொதுச்செயலாளர் பழனிசாமி. இனிமேல், கொங்கு மண்டலத்தின் முகமாக முதல்வர் விஜய் இருப்பார்” என்று ஆதவ் அர்ஜுனா விமர்சித்தார்.

## நெல்லை கவின் கொலை வழக்கு: சுர்ஜித் பெற்றோர் மீதான வழக்கு ரத்து

மதுரை: செப்.30-

நெல்லை கவின் கொலை வழக்கில் சார்பு ஆய்வாளர்கள் தம்பதி மீதான வழக்கை உயர் நீதிமன்ற கிளை ரத்து செய்தது.

தூத்துக்குடியைச் சேர்ந்த மென்பொறியாளர் கவின், நெல்லையின் வேறொரு சமூகத்தை சேர்ந்த பெண்ணை காதலித்ததால் படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் பெண்ணின் சகோதரர் சுர்ஜித், அவரது தந்தை சரவணன், தாய் கிருஷ்ணகுமாரி (இருவரும் சார்பு ஆய்வாளர்கள்) மாற்றும் உறவினர் ஜெயபால் ஆகியோரை சிபிசிஐடி போலீஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், தங்கள் மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி சரவணன், கிருஷ்ணகுமாரி, ஜெயபால் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுத்தாக்கல் செய்தனர். அதில், சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே நாங்கள் இல்லை. இந்த வழக்கு அரசியல் காரணங்களுக்காக மட்டுமே எங்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, எங்களை வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும்” என மனுக்களில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை நீதிபதி ஆர்.விஜயகுமார் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர்களின் கோரிக்கைகளைப் பதிவு செய்துகொண்ட நீதிபதி, சுர்ஜித் பெற்றோரான சரவணன், கிருஷ்ணகுமாரி மீதான வழக்கை ரத்து செய்தும், உறவினர் ஜெயபால் மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டார்.



# பழனியில் தேவேந்திர குல வேளாளர் சங்கம் மற்றும் தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் சார்பாக வட்டாட்சியரிடம் கோரிக்கை மனு...

திண்டுக்கல், செப்டம்பர். 30–

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டாட்சியர் அலுவலகத்தில் பழனி வாழ் தேவேந்திர குல வேளாளர் மக்கள் மற்றும் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பாக வட்டாட்சியரிடம் கோரிக்கை மனுவை அளித்தனர்..

தொடர்ந்து தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட நிலங்களை போலி ஆவணங்கள் கொண்டு சில நபர்கள் பதிவு செய்துள்ளதை கண்டித்தும் தேவேந்திரகுல மக்களுக்கு சொந்தமான இடத்தை மீட்டு திருப்பி வழங்க வேண்டும் என வட்டாட்சியரிடம் கோரிக்கை மனுவினை அளித்தனர்.

தொடர்ந்து பழனி நகர் பகுதியில் உள்ள பெருமாள் கோயில் அருகில் உள்ள இடம் மற்றும் அடிவாரம் பூங்கா ரோட்டில் உள்ள நந்தவனம் பாலசமுத்திரம் மயிலாடும்பாறை அருகில் உள்ள தேவேந்திர குலத்துக்கு சொந்தமான நெல் வயல் ஆகியவற்றை முறையாக அளவீடு செய்து ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களிடம் இருந்து மீட்டு தேவேந்திரகுல மக்களுக்கு வழங்க வேண்டும் என வலியுறுத்தி கோரிக்கை மனுவினை அளித்தனர்..

தொடர்ந்து சமூக வலைதளங்களில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக நிறுவன தலைவர் ஜான்பாண்டினை அவதூறாக பேசிய வாராகி மீது வழக்கு பதிவு செய்து கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி மனுவில் கூறப்பட்டிருந்தன.

தொடர்ந்து இந்நிகழ்வில் மாவட்ட பொறுப்பாளர் சரவணபாண்டி நகர செயலாளர் பழனியார்

நகர தலைவர் பிரபு மற்றும் பாண்டி பெரியசாமி கர்ணன் மாரிமுத்து வேல்முருகன் மனோ,கார்த்திக் சந்தோஷ் சந்தானம்,ராஜா காமு,தரணி, சுபேர் அழகுமலை தினேஷ் உள்ளிட்ட நகர ஒன்றிய பேரூர் கழக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்..

# 10 ஆயிரம் மரக்கன்றுகளுடன் பசுமை வளர்க்கும் சிந்துபட்டி ஊராட்சி வளர்ந்து வரும் மரக்கன்றுகள்... வளம் பெறும் கிராமம்!

மதுரை, செப்.30–

மதுரை மாவட்டம் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிந்துபட்டி ஊராட்சியில் செயல்பட்டு வரும் மரக்கன்றுகள் நர்சரி, கிராமப்புறங்களில் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் முயற்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.





ஊராட்சிகளின் வளர்ச்சி என்பது சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன் நின்றுவிடாமல், எதிர்கால தலைமுறைக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அந்த வகையில், சிந்துபட்டி ஊராட்சியில் பல்வேறு வகையான மரக்கன்றுகள் முறையாக வளர்க்கப்பட்டு, சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நர்சரியில் தற்போது மொத்தம் 10 ஆயிரம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பென்சில் மரக்கன்றுகள் 245, மாமரக்கன்றுகள் 1,970, பலாமரக்கன்றுகள் 860, வேங்கை மரக்கன்றுகள் 1,850, நாவல் மரக்கன்றுகள் 900, இலுப்பை மரக்கன்றுகள் 2,325, தேக்கு மரக்கன்றுகள் 850, மகாகனி மரக்கன்றுகள் 1,000 என பல்வேறு வகையான மரக்கன்றுகள் உள்ளன.

ஒரே இடத்தில் பல்வேறு மர வகைகள்

பழமரங்கள், நிழல் தரும் மரங்கள், நாட்டுமரங்கள், நீண்டகால பயன்பாட்டுக்குரிய மரங்கள் என பல்வேறு வகைகளை உள்ளடக்கியிருப்பது இந்த நர்சரியின் சிறப்பாகும். குறிப்பாக மாமரம், பலாமரம், நாவல் போன்ற பழமரக்கன்றுகளுடன், வேங்கை, இலுப்பை, தேக்கு, மகாகனி உள்ளிட்ட மரக்கன்றுகளும் வளர்க்கப்படுகின்றன.

இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் அரசு துறைகளின் தேவைக்கேற்ப மரக்கன்றுகளை வழங்குவதற்கான வாய்ப்பு உருவாகிறது. ஊராட்சி பகுதிகளில் சாலை ஓரங்கள், பொது இடங்கள், பள்ளி வளாகங்கள், அரசு அலுவலக வளாகங்கள் உள்ளிட்ட பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகளை நடுவதற்கும் இத்தகைய நர்சரிகள் முக்கிய ஆதாரமாக அமைகின்றன.

ஊராட்சிகளின் முக்கிய பசுமைப் பணி

தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நர்சரிகள் அமைத்து மரக்கன்றுகளை வளர்ப்பதை ஊக்குவித்து வருகிறது. இதன் நோக்கம் கிராமப்புறங்களில் பசுமைப் பரப்பை அதிகரிப்பதுடன், தேவையான மரக்கன்றுகளை உள்ளூரிலேயே உருவாக்குவதாகும்.

மரக்கன்றுகளை நட்டு வைப்பது மட்டு மின்றி, அவற்றை தொடர்ந்து பராமரித்து உயிர்ப்புடன் வளர்ப்பதே முக்கியமானதாகும். நர்சரிகளில் மரக்கன்றுகளின் எண்ணிக்கை, இனவகை, வளர்ச்சி நிலை உள்ளிட்ட விவரங்களை கண்காணித்து பராமரிக்கும் நடைமுறைகளும் ஊரக வளர்ச்சித்துறையின் நர்சரி மேலாண்மை முறையில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

சிந்துபட்டி ஊராட்சி நர்சரியின் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளில் **

ஊராட்சி செயலாளர் பாண்டி,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் செண்பகம் , வட்டார வளர்ச்சி அலுவலர் கதிரவன் ஆகியோரின் நிர்வாகக் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதல் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

10 ஆயிரம் மரக்கன்றுகள் ஒரே இடத்தில் வளர்க்கப்பட்டு, அவற்றை முறையாக பராமரிப்பது என்பது தொடர்ச்சியான பணியாகும். தண்ணீர் வழங்குதல், கன்றுகளை பாதுகாத்தல், தேவையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், வளர்ச்சியை கண்காணித்தல் உள்ளிட்ட பணிகள் தொட ர்ந்து மேற்கொள்ளப்படுவதன் மூலம் நர்சரி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

ஒரு மரக்கன்று இன்று சிறியதாக இருந்தாலும், அது வளர்ந்த பின்னர் பல ஆண்டுகளுக்கு நிழல், காற்றுத் தரம், சுற்றுச்சூழல் சமநிலை உள்ளிட்ட பல்வேறு நன்மைகளை வழங்கக்கூடியது. குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள அரசு மற்றும் பொதுப் பயன்பாட்டு இடங்களில் மரங்கள் அதிகரிப்பது சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கிய பங்களிப்பாக அமையும்.

அந்த வகையில், சிந்துபட்டி ஊராட்சியில் வளர்க்கப்படும் 10 ஆயிரம் மரக்கன்றுகள் வெறும் எண்ணிக்கை அல்ல; எதிர்காலத்தில் பசுமையான கிராமத்தை உருவாக்கும் விதைகள் என்றே கூறலாம்.

மாவட்டத்தின் பல்வேறு ஊராட்சிகளிலும் இதுபோன்ற நர்சரிகள் முறையாக உருவாக்கப்பட்டு, தரமான மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு, அவை நடப்பட்ட பின்னரும் தொடர்ந்து பராமரிக்கப்படும் பட்சத்தில் கிராமப்புறங்களில் பசுமைப் பரப்பு மேலும் அதிகரிக்கும்.

“ஒரு ஊராட்சிக்கு ஒரு நர்சரி; ஒவ்வொரு நர்சரியிலும் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள்; ஒவ்வொரு கிராமத்திலும் பசுமை” என்ற நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சிந்துபட்டி ஊராட்சியின் முயற்சி ஒரு சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறது.





# ரூ.10.25 கோடியில் புதுப்பொலிவு பெற்ற காந்தி அருங்காட்சியகம் : பழமை மாறாமல் நவீன வசதிகளுடன் திறப்பு பாரம்பரியப் பிரிவு பொறியாளர்கள் மகிழ்ச்சி

மதுரை, செப்.30–

மதுரை தமுக்கம் அருகே ரூ.10.25 கோடி மதிப்பில் பழமை மாறாமல் புனரமைக்கப்பட்ட காந்தி நினைவு அருங்காட்சியகத்தை தமிழக முதலமைச்சர் திங்கட்கிழமை திறந்து வைத்தார்.

மகாத்மா காந்தியின் நினைவைப் போற்றும் வகையில், அவரது மறைவு க்குப் பின்னர் நாட்டிலேயே முதன்முறையாக மதுரையில் காந்தி நினைவு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. தற்போது பாரம்பரிய கட்டிடத்தின் பழமை மாறாமல் பாதுகாக்கும் வகையில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

350 ஆண்டுகள் பழமையான கட்டிடம்

அருங்காட்சியகம் அமைந்துள்ள கட்டிடம் 1670–ம் ஆண்டு ராணி மங்கம்மாளால் கட்டப்பட்ட கோடைகால அரண்மனையாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மாவட்ட ஆட்சி யர்களின் இல்லமாகவும் இக்கட்டிடம் பயன்படுத்தப்பட்டது. 13 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த வளாகத்தை தமிழக அரசு 1955–ம் ஆண்டு அகில இந்திய காந்தி நினைவு நிதியிடம் ஒப்படைத்தது.

இதையடுத்து அமைக்கப்பட்ட காந்தி நினைவு அருங்காட்சியகத்தை 1959–ம் ஆண்டு ஏப்ரல் 14–ம் தேதி அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு திறந்து வைத்தார்.

அருங்காட்சியகத்தில் மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டபோது அணிந்திருந்த ரத்தம் தோய்ந்த ஆடை, கண்ணாடி, காலணி உள்ளிட்ட 14 வகையான பொருட்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் காந்தி குடில், காந்தி அஸ்திபீடம் உள்ளிட்டவையும் இங்கு அமைந்துள்ளன.

நவீன வசதிகள்

அருங்காட்சியகத்தை பழமை மாறாமல் புதுப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து, ரூ.6 கோடி மதிப்பில் புனரமை ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2022–ம் ஆண்டு அக்டோபர் 2–ம் தேதி பொதுப்பணித்துறை கட்டிட மையம் மற்றும் பாதுகாப்புப் பிரிவு சார்பில் பணிகள் தொடங்கப்பட்டன.

புனரமைப்பு பணிகளின்போது சுதந்திரப் போராட்ட வரலாற்றை அறிந்து கொள்ள தொடுதிரைகள், காந்தியின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ஒலி–ஒளிக் காட்சி அரங்கம், ‘காந்தியும் மதுரையும்’ என்ற தலைப்பில் ஆவணப்படங்களை திரையிடும் வசதி, டிஜிட்டல் புகைப்படங்கள், டிஜிட்டல் திரைகள் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இதனால் திட்ட மதிப்பீடு ரூ.10.25 கோடியாக உயர்ந்தது. பணிகள் நிறைவடைந்து சுமார் ஓராண்டுக்கு முன்பே அருங்காட்சியகம் திறப்பு விழாவுக்கு தயாராக இருந்த நிலையில், பல்வேறு காரணங்களால் திறப்பு விழா தாமதமானது.

பொறியாளர்கள் குழு புகைப்படம்

முதலமைச்சரின் மதுரை வருகையையொட்டி தற்போது அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது. விழாவுக்குப் பின்னர், அருங்காட்சியக புனரமைப்புப் பணிகளில் முக்கிய பங்காற்றிய தமிழ்நாடு பொதுப்பணித்துறையின் பாரம்பரிய மற்றும் புராதனக் கட்டிடங்களைப் பாதுகாத்து புனரமைக்கும் கட்டிட மையம் மற்றும் பாதுகாப்புப் பிரிவு பொறியாளர்கள் குழுவாக புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இதில் செயற்பொறியாளர் அழகிரிசாமி, உதவி செயற்பொறியாளர் நான்சி மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர். அருங்காட்சியகம் புதுப்பொலிவுடன் திறக்கப்பட்டதையடுத்து, பணியில் ஈடுபட்ட பொறியாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# சிவகங்கையில் சாலையோரம் மலைபோல் தேங்கிய கழிவுகள் துர்நாற்றம், பறக்கும் பிளாஸ்டிக் கழிவுகளால் பொதுமக்கள் அவதி உடனடியாக அகற்ற கோரிக்கை

சிவகங்கை, செப்-30

மதுரை மார்க்கத்திலி ருந்து சிவகங்கை நகருக்குள் வரும் பகுதியில், சிவகாமிமுத்துக்காமாட்சி தோரண வாயில் அருகே சாலையோரத்தில் குப்பை மற்றும் கழிவு மண் மலைபோல் தேங்கிக் கிடப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.



வாய்க்கால் மற்றும் கழிவுநீர்ப் பாதையைத் தூர்வாரும்போது அள்ளப்பட்ட கழிவு மண், செடிகொடிகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் நீண்ட நாட்களாக அகற்ற ணப்படாமல் சாலையோ ரத்திலேயே குவித்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதாகவும், காற்று வீசும்போது பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகள் சாலையில் பறப்பதால் வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு உள்ளா வதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். அருகிலேயே குடியிரு ப்புகள் இருப்பதுடன், குழந்தைகளும் அப்பகுதியில் விளையாடி வருவதால் சுகாதார பாதிப்பு மற்றும் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்படக்கூடும் என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து சம்பந்தப்பட்ட நிர்வாகத்திடம் தெரிவித்தபோது, “கழிவுகள் காய்ந்த பிறகே அகற்றப்படும்” என பதில் அளிக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். எனவே, பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு சாலையோரத்தில் குவிந்து கிடக்கும் கழிவுகளை உடனடியாக அப்புற ப்படுத்தி, அப்பகுதியை சுத்தப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருவள்ளூரில் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலகவும் கைது செய்யவும் வலியுறுத்தி ஒருங்கிணைந்த காங்கிரஸ் கமிட்டி சார்பில் கண்டன ஆர்பாட்டம்

திருவள்ளூர், செப். 30–

இந்திய தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் எஸ்ஐஆர்–ல் பாஜகவுக்கு ஆதரவாக செயல்படுவதாக கூறி காங்கிரஸ் கட்சி சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்பாட்டம் நடைபெற்றது. அதன்படி திருவள்ளூர் ஒருங்கிணைந்த காங்கிரஸ் கமிட்டி சார்பில் திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே ஆர்பாட்டம் நடைபெற்றது. இதில் வடக்கு மாவட்ட தலைவர் ஆர்.சசிகுமார் தலைமை தாங்கினார்.






இதில் நிர்வாகிகள் காங்கை குமார், அமித் பாபு,

மாநில இணைப்பு மையத் தலைவர்

ஏ.ஜி. சிதம்பரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.ஞானேஷ் குமார் உடனடியாக பதவி விலக வேண்டும்.

அவரை கைது செய்ய வேண்டும் எனவும் ஆர்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.இந்த ஆர்பாட்டத்தில்

மாநில நிர்வாகிகள்

ஆனந்தன்,

அருணாசலம்,

சம்பத்,

கோவிந்தராஜ், வெங்கட்ராஜ் ரமேஷ் தாஸ்

மற்றும் நிர்வாகிகள் ஜே. கே. வெங்கடேசன்,

ஏ. திவாகர்,அன்பழகன் சிவக்குமார் ஜோதி சுதாகர்

கலீல் ரஹ்மான்வாசு அருண்குமார் பிரேம்குமார் பிரியா சண்முகம் முபாரக் உட்பட 200–க்கும் மேற்பட்ட காங்கிரசார் கலந்து கொண்டு கோஷமிட்டனர்.

# சிவகங்கையில் ‘துளிர் திறனறிதல் தேர்வு’ ஆயத்தப் பணிகள் தொடக்கம்: மாணவர்களிடம் அறிவியல் ஆர்வத்தையும் போட்டித் தேர்வு திறனையும் வளர்க்க தமிழ்நாடு அறிவியல் இயக்கம் முயற்சி

சிவகங்கை, செப். 30–

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் ஆண்டுதோறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்காக நடத்தப்படும் ‘துளிர் திறனறிதல் தேர்வு’ தொடர்பான ஆயத்தப் பணிகள் சிவகங்கை மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் பல்வேறு வகையான பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்கும் இந்தத் தேர்வில் ஆண்டுதோறும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்று வருவதாக தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தெரிவித்துள்ளது.

பள்ளிப் பருவத்திலேயே மாணவர்கள் OMR விடைத்தாளில் பதிலளிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளவும், எதிர்காலத்தில் நீட், ஜேஇஇ உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகள் மற்றும் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள அடிப்படை அனுபவத்தைப் பெறவும் இத்தேர்வு உதவுவதாக அமைப்பினர் தெரிவித்தனர்.



மாவட்ட அளவில் சிறப்பிடம் பெறும் மாணவ, மாணவிகள் கட்டணமில்லா கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அறிவியல் அறிஞர்களுடன் கலந்துரையாட வாய்ப்பு வழங்கப்படுகிறது. தேர்வில் பங்கேற்கும் அனைவருக்கும் பாராட்டுச் சான்றிதழுடன், ஓராண்டுக்கு ‘விஞ்ஞான துளிர்’ அறிவியல் இதழும் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இத்தேர்வில் பங்கேற்ற நிலையில், இந்த ஆண்டுக்கான தேர்வு ஆயத்தப் பணிகள் தற்போது தொடங்க ப்பட்டுள்ளன.

சிவகங்கையில் நடைபெற்ற தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் அறிவொளி சங்கம விழாவின் ஒரு பகுதியாக, துளிர் திறனறிதல் தேர்வு குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடம் கொண்டு செல்ல துண்டுப் பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநிலத் தலைவர் டாக்டர் திருநாவுக்கரசு, தேர்வு தொடர்பான துண்டுப் பிரசுரத்தை சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமியிடம் வழங்கி ஆயத்தப் பணிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் பிரபு, மாவட்டப் பொருளாளர் சாஸ்தா சுந்தரம், அகில இந்திய மக்கள் அறிவியல் இயக்க கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் ஆஷா மிஸ்ரா, அறிவியல் இயக்க முன்னாள் பொதுச்செயலாளர் ராஜமாணிக்கம், வானவில் மன்ற ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், மாநிலத் துணைத் தலைவர் காந்தி, மாவட்ட நிர்வாகிகள் ராசு, பாலசுப்பிரமணியன், மேப்பல் முருகானந்தம், கவிஞர் தமிழ்க்கனல், மெஹர் பானு, கிருஷ்ணவேணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தேர்வு குறித்த கூடுதல் தகவல்களைப் பெறவும், தேர்வில் பங்கேற்க விரும்பும் பள்ளிகள் பதிவு தொடர்பான விவரங்களை அறியவும் 7010941705 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பால்வளத்துறை சார்பில்

## 5 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கான பதிவுச்சான்றுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், சங்க உறுப்பினர்களிடம் வழங்கினார்

தேனி, செப்டம்பர். 30–

தேனி மாவட்டத்தில் பால் உற்பத்தி செய்யும் ஏழை விவசாயிகளுக்கு,

அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு உரிய விலை கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை வைத்ததைத் தொடர்ந்து, மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத கிராமங்களில் புதிய சங்கங்களை அமைக்கவும், சங்கங்கள் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய உற்பத்தி விலை கிடைக்கச் செய்யவும், ஆவின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களை பால் உற்பத்தியா ளர்களிடம் கொண்டு சேர்க்கவும், கறவை மாடு வாங்குவதற்கும், மாடுகளைப் பராமரிப்பதற்கும் தேவையான கடன் வசதிகளை ஏற்படுத்தித்தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். அதனடிப்படையில், பால்வளத்துறை மற்றும் ஆவின் சார்பில் கீழ்க்கண்ட கிராமங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, ஆவின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்து பால்உற்பத்தியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் தடமலைநாணயக்கன்பட்டி, தேக்கம்பட்டி, செங்குலத்துப்பட்டி, பண்ணைபுரம் மற்றும் சாலிமரத்துப்பட்டி ஆகிய 5 கிராமங்களில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்அமைக்கப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட 5 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கான பதிவுச் சான்றுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சங்க உறுப்பினர்களிடம் வழங்கி, பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைப்பதையும், ஆவின் நலத்திட்டங்களின் பயன்கள் அவர்களை சென்றடைவதையும் உறுதி செய்ய வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் துணைப்பதிவாளர் (பால்வளம்) .வெங்கடேஷன், சார்பதிவாளர்கள் (கூட்டுறவு) .சுரேஷ்,முருகன் மற்றும் முதுநிலை ஆய்வாளர், விரிவாக்க அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உதகை சேட் மருத்துவ மனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தினை வழங்கினார்

நீலகிரி, செப். 30–

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச.ஜோசப் விஜய் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையி ல்தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டம், உதகை, சேட் நினைவு அரசு மருத்துவ மனையில், மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தினை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் , தமிழக மக்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தாய்-சேய் நலனை மேம்படுத்துவதற்கு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி, இலவச பிரசவம் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தை பராமரிப்பு சேவைகள், அவசர மகப்பேறு சிகிச்சை, ஊட்டச்சத்து அளித்தல், பிரசவத்திற்காக மருத்துவமனையைத் திட்டமிடும் முறை, கர்ப்பிணி மற்றும் குழந்தைகள் கூட்டுக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மென்பொருள் (PICME) உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வெற்றி கரமாகச் செயல்படுத்தி மாநிலத்தில் தாய்-சேய் நலக் குறியீடுகள் செயல்படுத்தப்பட்டு குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டு உள்ளன.

மேலும், தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்ந்த சேவைகளில் மக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலும், தமிழர் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தில், தாய்மாமன் சீர்மரபைப் பிரதிபலிக்கும்வகையிலும், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளைச் சிறப்பிக்கும் வகையில் “தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்” என்ற சிறப்பு நலத்திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், 22.06.2026 அன்று முதல் அரசு மருத்துவமனைகளில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 7.80 இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. இவற்றில் 99.9 சதவீத பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன 5 - 6 (National Family Health Survey-6) பதிவாகியுள்ளது. இவற்றில் 4.20 இலட்சம் பிரசவங்கள் (53%) அரசு மருத்துவமனைகளில் நிகழ்கின்றன. அதில் 90 சதவீதம் சீமாங் மையங்களில் (CEMONC Centres) நடைபெறுகின்றன. இதன்மூலம், பாதுகாப்பான பிரசவம் மற்றும் ஆரோக்கியமான குழந்தைகளின் பிறப்பை உறுதி செய்வதில் பொது சுகாதார அமைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரு கிராம் எடை கொண்ட தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது. அதற்கென தனித்துவமான வரிசை எண்ணும் (Unique Serial Number), சேதப்படுத்த முடியாத பாதுகாப்புப் பெட்டகமும் (Tamper-proof Packaging) வழங்கப்பட்டு உள்ளது. மேலும், இத்திட்டத்திற்காக முதல் தவணையாக 1,28,449 தங்க மோதிரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் நிரந்தரமாக வசிக்கும் தாய்மார்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவார்கள். PICME-யில் பதிவு செய்யப்பட்டு ஊர் அடையாள எண் (RCHID) உள்ளவர்களுக்கு வழங்கப்பட உள்ளது. அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (28.09.2026) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து நீலகிரி மாவட்டம் உதகை சேட் நினைவு அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தினை வழங்கினார். மேலும், இத்திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் சுமார் 615 தகுதியான குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்பட்ட உள்ளது.

மருத்துவத்துவக்கல்லூரி இந்நிகழ்வின் போது, உதகை அரசு மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீனிவாசன், இணை இயக்குநர் (மருத்துவ நல பணிகள்) மரு.ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. சோமசுந்தரம், உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், உதகை வட்டாட்சியர் சதீஷ்வர நாயக், மருத்துவர்கள், அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ரேஷன் அரிசி விநியோகத்தில் முறைகேடு?தேனி மாவட்டத்தில் அதிகாரிகள் உடனடி ஆய்வு நடத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை

தேனி, செப்டம்பர்.30–

தேனி மாவட்டத்தில் பொதுமக்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அரிசியின் தரம் குறித்து பொதுமக்கள் மத்தியில் தொடர்ந்து புகார்கள் எழுந்து வருகின்றன.



நியாயவிலைக் கடைகளுக்கு வரும் அரிசியில் தரமான அரிசியைத் தனியாக ஒதுக்கி வைத்துவிட்டு, பொதுமக்களுக்கு தரம் குறைந்த அரிசி வழங்கப்படுவதாகவும், இதனால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகவும் புகார்கள் தெரிவிக்கின்றன.

மேலும், போடி நாயக்கனூர் கீழத்தெருவில் உள்ள 3-ஆம் எண் நியாயவிலைக் கடையில், ரேஷன் அரிசி முறைகேடாக விற்பனை செய்யப்படுவதாகவும் சிலர் குற்றச்சாட்டு தெரிவித்து வருகின்றனர்.அக்கடையில் பணிபுரியும் பிரபாகரன் என்பவர் தொடர்பாகவும் பல்வேறு புகார்கள் அளிக்கப்பட்டுள்ளதாகவும், புகார்கள் மீது அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்ட போதிலும், இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை என்றும் புகார்தாரர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இந்த விவகாரம் குறித்து கேள்வி எழுப்பியபோது, தன்னை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் எனக் கூறி, பத்திரிகையாளருக்கு எதிராக பொய் புகார் அளிப்பதாக மிரட்டியதாகவும் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் மற்றும் உணவுத்துறை அமைச்சருக்கு வேண்டுகோள்இந்தப் புகார்களை மாவட்ட நிர்வாகமும், கூட்டுறவுத்துறை மற்றும் உணவுத்துறை அதிகாரிகளும் சுயாதீனமாகவும், நேர்மையாகவும் விசாரணை செய்து, உண்மை நிலையை பொதுமக்களுக்கு வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும்.நியாயவிலைக் கடைக்கு வரும் அரிசியின் தரம் மற்றும் இருப்பு பதிவுகளை ஆய்வு செய்ய வேண்டும்.

அரிசி விநியோகம் மற்றும் விற்பனை தொடர்பான பதிவுகளை சரிபார்க்க வேண்டும். புகாரில்குறிப்பிடப்பட்டுள்ள கடையில் திடீர் ஆய்வு நடத்த வேண்டும்.முறைகேடு உறுதிசெய்யப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது விதிமுறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்களிடம் தரமான ரேஷன் அரிசி முறையாக சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

பொதுமக்களின் உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய இந்த விவகாரத்தில் தமிழக அரசு மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. மேற்கண்டவை புகார்தாரர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் விசாரணை மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் உண்மை நிலை உறுதி செய்யப்பட வேண்டும்.




## தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சியர்

திருப்பத்தூர், செப். 30–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் மதுரை இராசாசி மருத்துவமனையில், “தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை” தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தலைமை அரசு மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., பங்கேற்று, பச்சிளங் குழந்தைகளுக்கு தங்கமோதிரம் அணிவித்தார். உடன் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இணை இயக்குநர் மரு. ஞானமீனாட்சி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு. நா.கலுசிவலிங்கம், அரசு தலைமை மருத்து வமனை முதன்மை மருத்துவ அலுவலர் மரு.சிவகுமார், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கண்காணிப்பாளர் மரு.மணிவேல், மாவட்ட தாய் சேய் நல அலுவலர் மரு.பியூலா, மாவட்ட தொற்று நோய் அலுவலர் அரவிந்தராஜ், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்

## சென்னை மதுரவாயல் சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம்

சென்னை, செப்.30–

சென்னை மதுரவாயல் சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற மதுரவாயல் ஆலப்பாக்கம் நெற்குன்றம் ஒருங்கிணைந்த சங்கத்தின் நிர்வாக தேர்தலை சென்னை மாவட்டத்தின் தலைவரும் மதுரவாயல் சங்கத்தினுடைய செயலாளரும் மனிதநேய பண்பாளர் அ.மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நெற்குன்றம் சங்கத்தினுடைய தலைவர் வி.எம்.செல்வகுமார் அனைவரையும் வரவேற்று சிறப்பு அழைப்பாளராக மத்திய சங்கத்தின் மாநில பொருளாளராகவும் சென்னை மாவட்ட செயலாளர் ஆ.ப.சம்பத்குமார் மாநில



துணைச் செயலாளர் சுப்பையா மாவட்ட பொருளாளர் கே.ஆர். கங்காதரன் மாவட்ட துணைச் செயலாளர் சிட்டிபாபு தேர்தல் அதிகாரியாக நிர்வாகத்தை சிறப்பான முறையில் தேர்ந்தெடுத்தனர். சலவை துறையின் தலைவர் வி.எம். செல்வகுமார் செயலாளர், அ.மாரிமுத்து பொருளாளர் பி.கிரி துணைத்தலைவர் எம்.பொன்னுசாமி கௌரவ தலைவர் கே.முருகதாஸ் அவை தலைவர் ஆர். மாதவன் துணை செயலாளர் ஜே.அபாய் இணைச் செயலாளர் பி.எஸ்.முருகன் நிர்வாகிகளாக ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டர். மதுரவாயல் சங்கம் ஆலப்பாக்கம் சங்கம் நெற்குன்றம் சங்கம் உறுப்பினர் நிர்வாகிகள் 70-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் கழிவறை வசதியும் துவைத்த துணிகளை (உலர்) கயிற்றில் உலர்த்துவதற்கு இடங்களை பின்பக்கமாக உள்ள இடத்தை சுத்தம் செய்து சுற்றுச்சுவர் அமைத்து தருமாறு கேட்டுக் கொண்டனர். வாழ் மக்களுக்கு நவீன ஓய்வரையும் அமைத்து தர வேண்டுமென கேட்டுக் கொண்டனர். இந்தக் கூட்டத்தில் தீர்மானமாக மாவட்டம் சென்னை மாவட்டம் சார்பாக எடுத்துக்கொள்ளப்பட்டது. அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

## தாம்பரத்தில் 75% மழைநீர் வடிகால் கால்வாய் பணிகள் முடிவடைந்த நிலையில் அதன் பாதையை மாற்றியமைத்து மீண்டும் மழை நீர் கால்வாய் பணி நடைபெறுவதை கண்டித்து 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்

தாம்பரம், செப். 30–

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் 75% மழைநீர் வடிகால் கால்வாய் பணிகள் முடிவடைந்த நிலையில் அதன் பாதையை மாற்றியமைத்து மீண்டும் மழை நீர் கால்வாய் பணி நடைபெறுவதை கண்டித்து 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்ட சம்பவம் தாம்பரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது





ஏற்கனவே மழைநீர் வடிகால்வாய் பணிக்காக 75% பணிகள் முடிந்த நிலையில் மீண்டும் அதே பணிக்காக வேறு பாதையை தேர்ந்தெடுத்து சாலையில் தோண்டப்பட்டதால் அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட மேற்கு தாம்பரம், இரும்புலியூர், உமா நகர், டி.டி.கே.நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 5,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் ஏற்கனவே மாநகராட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு 75 சதவீத மழைநீர் வடிகால் கால்வாய் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், திடீரென கால்வாய் திட்டப் பாதையை மாற்றி பொதுமக்கள் வசிக்கக்கூடிய பகுதியில் மீண்டும் சாலைகள் தோண்டப்படுவதைக் கண்டித்து, 100-க்கும் மேற்பட்ட அப்பகுதி மக்கள் ஊர்வலமாகச் சென்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கெனவே அரசின் ஒப்புதல் பெற்று 75% பணிகள் நிறைவுற்ற வழித்தடத்தை மாற்றுவது நிர்வாக ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். மேலும், இப்புதிய திட்டப் பணிகள் பொதுமக்கள் வசிக்கக்கூடிய பகுதியில் நடைபெற்றால் சுமார் 2,000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள் எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

ஏற்கனவே பணிகள் தொடங்கி 75% முடிவுற்ற நிலையில், மீதமுள்ள கால்வாய் பணிகள் சுமார் 157 மீட்டர் மட்டுமே உள்ளது. ஆனால், தற்போது மாற்றுப் பாதையில் அமைக்க முயன்றால் புதிதாக சுமார் 600 மீட்டருக்கு கால்வாய் வெட்ட வேண்டியிருக்கும். இதனால் தேவையற்ற திட்டச் செலவும், அரசு நிதிக்கான கூடுதல் சுமையும் பன்மடங்கு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

மேலும் தற்போது பணிகள் நடைபெற உள்ள மாற்றுப் பாதையில் பல வளைவுகள் இருப்பதால் நீரோட்டத்தின் வேகம் குறைந்து வெள்ள அபாயம் தீவிரமடையும். இதனால் அன்னை இந்திரா நகர், ஜெருசலேம் நகர், கிருஷ்ணா நகர், சக்தி நகர், கண்ணன் அவென்யூ உள்ளிட்ட பல பகுதிகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் எதிர்காலத்தில் கடுமையான வெள்ள பாதிப்பைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது

இதனால் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் கால்வாய் இணைப்பு துண்டிக்கப்படும் அபாயம் உள்ளதுடன், புதிய பாதாள சாக்கடை வசதிகளையும் அமைக்க முடியாமல் போகலாம்.

கால்வாயில் கழிவுநீர் தேங்குவதால் நிலத்தடி நீர் மாசுபடுதல், குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளால் அடைப்பு ஏற்பட்டு சுகாதாரச் சிக்கல்கள் உருவாகும்.

கால்வாயில் உடைப்பு ஏற்பட்டால் கழிவுநீர் தேங்கி நோய் பரவுவதோடு, அருகில் உள்ள வீடுகளின் அடித்தளம் மற்றும் கட்டடங்களை அவை பாதிக்கும் என்று அப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்

இதுகுறித்து நீர்வளத்துறை அதிகாரி களிடம் பொதுமக்கள் தரப்பில் விளக்கம் கேட்கப்பட்ட போதிலும், யாரிடமிருந்தும் முறையான பதில் அளிக்கப்படவில்லை.

எனவே, ஏற்கனவே 75 சதவீதம் பணி முடிந்த மூலப்பாதையிலேயே எஞ்சிய பணிகளை முடிக்க வேண்டும் என்றும், புதிய பாதையில் கால்வாய் பணிகள் நடைபெற்றால் அரை கிலோமீட்டருக்கு மேல் சாலைகள் தோண்டப்பட்டு கடுமையான போக்குவரத்து நெரிசலும் வெள்ள அபாயமும் ஏற்படும் என்பதால், அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு இப்பிரச்சனைக்கு உரிய தீர்வு காண வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



■ மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் மாண்புமிகு மேயர் (பொ) தி.நாகராஜன் சொத்துவரி பெயர் மாற்றம் வேண்டி விண்ணப்பித்த மனுதாரருக்கு உடனடியாக சொத்துவரி பெயர் மாற்றம் உத்தரவு ஆணையினை வழங்கினார். அருகில் உதவி ஆணையாளர் மணிமாறன் உடன் உள்ளார்.

# நியோமேக்ஸ் மோசடி: பணத்தை மீட்க மாபெரும் போராட்டம் வெடிக்கும் மானாமதுரை சங்க பொதுக்குழுவில் அதிரடி தீர்மானங்கள்!

மதுரை, செப்.30-

நியோமேக்ஸ் நிதி நிறுவன மோசடியில் பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்களின் உரிமைப் போராட்டத்தை தீவிரப்படுத்தும் நோக்கில், மானாமதுரை சங்க முதலீட்டாளர்கள் பொதுக்குழு கூட்டம் மதுரையில் உள்ள திருமண மஹாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சங்கத் தலைவர் அழகுமலை மற்றும் செயலாளர் கணேஷ் ஆதித் தலைமை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக மதுரை மாநகராட்சி பொறுப்பு மேயர் தோழர் T. நாகராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாவட்டச் செயலாளர் கணேசன் மற்றும் சிபிஎம் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் பங்கேற்றனர். மேலும், தேனி லட்சுமிபுரம், நெய்வேலி, கும்பகோணம், ராமநாதபுரம், சிவகாசி (சவுத்சைட் - ரோசன்கான்), மயிலாடுதுறை உள்ளிட்ட பல்வேறு பகுதி சங்கங்களின் தலைவர்கள் மற்றும் 400-க்கும் மேற்பட்ட




நிர்வாகிகள், பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் பணத்தை முழுமையாக மீட்க வலியுறுத்தி 7 முக்கிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:

* பொருளாதார குற்றப்பிரிவின் தாமதத்திற்கு கண்டனம்: 40 மாதங்களாகியும் முதலீட்டாளர்கள் எண்ணிக்கை, மொத்த முதலீடு, குற்றவாளிகளின் சொத்து விவரங்களை முழுமையாகக் கண்டறியாமல் பொருளாதார குற்றப்பிரிவு காலதாமதம் செய்வதற்கு கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

* ஏல நடைமுறை பலனளிக்கவில்லை: உயர்நீதிமன்றம் அமல்படுத்திய சமரச ஏல நடைமுறை எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

* ஏல நடவடிக்கைகளை கேலிக்கூத்தாக்குவதை கண்டித்தல்: சொத்துகளை ஏலத்திற்கு எடுப்பதும், பின்னர் அதை ரத்து செய்ய முயற்சிப்பதுமான நடவடிக்கைகளுக்கு கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

* மாற்று வழியை யோசிக்க கோரிக்கை: ஏலம் மூலம் போதிய நிதி திரளாத காரணத்தால், நீதிமன்றம் மாற்றுத் தீர்வு குறித்து யோசிக்க வேண்டும்.

* நிறுவன சொத்துக்களை விற்று முழு செட்டில்மென்ட்: வரும் 30-ஆம் தேதியுடன் ஏல நிகழ்வுகளை நிறுத்திவிட்டு, உயர்நீதிமன்ற கண்காணிப்பில் மீதமுள்ள நிறுவன சொத்துக்களை அந்த நிறுவனமே 6 மாத காலத்திற்குள் விற்று முதலீட்டாளர்களுக்கு முழுப் பணத்தையும் திரும்ப வழங்க உத்தரவிட வேண்டும்.

* மாதாந்திர தீர்வு வழங்கல்: உண்மையான முதலீடு மற்றும் கமிஷன் பத்திரங்களை வகைப்படுத்தி, புகார் அளித்த தேதிகளின் அடிப்படையில் மாதம் தோறும் முன்னுரிமை தந்து தீர்வு காண வேண்டும்.

* மூத்த முகவர்கள் மீது நடவடிக்கை: முதலீட்டாளர்களிடம் நேரடியாக பணம் பெற்ற முதல் நிலை மூத்த முகவர்களைக் கண்டறிந்து குற்றவாளிப் பட்டியலில் சேர்க்க வேண்டும்; அவர்களை இரண்டாம் கட்ட செட்டில்மென்ட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

நீதிமன்ற நடவடிக்கைகளைத் தவறாகப் பயன்படுத்தி குற்றவாளிகள் காலதாமதம் செய்ய முயற்சித்தால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPM) தலைமையுடன் இணைந்து தமிழ்நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களைத் திரட்டி மிக பிரம்மாண்டமான தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என கூட்டத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடரும் வாகனத் திருட்டுகள்

## 18-வது இருசக்கர வாகனம் மாயம் பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் அதிர்ச்சி

திருப்பத்தூர், செப்.30-

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு நாள்தோறும் பணி நிமித்தமாகப் ஏராளமான அரசு அலுவலர்களும், பல்வேறு மனுக்களை அளிப்ப தற்காகப் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் வந்து செல்கின்றனர். இவர்கள் அனைவரும் தங்களது இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை அலுவலக வளாகத்திற்குள்ளேயே நிறுத்திச் செல்வது வழக்கம்.






இந்நிலையில், ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நிறுத்தப்படும் இருசக்கர வாகனங்கள் தொடர்ச்சியாகக் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. பாதுகாப்பு நிறைந்த இடமாகக் கருதப்படும் ஆட்சியர் அலுவலக வளாக த்திலேயே அடுத்தடுத்து வாகனங்கள் திருடப்பட்டு வருவது பொதுமக்களிடையேயும், இங்கு பணியாற்றும் அலுவலர்களிடையேயும் பெரும் அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, தற்போது 18-வதாக 'ஸ்ப்ளெண்டர் பிளஸ்' (Splendor Plus) ரக இருசக்கர வாகனம் ஒன்று மர்ம நபர்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளது. தொடரும் இந்தச் சம்பவங்களால், ஆட்சியர் அலுவலகத்திற்கு வாகனங்களில் வருவோர் தங்களது வாகனங்களின் பாதுகாப்பு குறித்துக் கடும் கவலையடைந்துள்ளனர்.

கோரிக்கை மற்றும் வேண்டுகோள்:

எனவே, இதில் சம்பந்தப்பட்ட திருட்டு நபர்களை விரைந்து கண்டுபிடித்து, காணாமல் போன அனைத்து வாகனங்களையும் மீட்டெடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட பொதுமக்களும் அரசு அலுவலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், குற்றச் சம்பவங்களைத் தடுக்கும் பொருட்டும், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) அவர்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எதிர்காலத்தில் இது போன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்கவும், குற்றவாளிகளைக் கண்டறியவும், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் முழுவதிலும் மற்றும் வாகன நிறுத்தப் பகுதிகளிலும் உடனடியாக உயர் ரக சிசிடிவி (CCTV) கண்காணிப்பு கேமராக்களைப் பொருத்தி, கண்கா ணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் சமூக ஆர்வல ர்களும் பொதுமக்களும் வலியுறுத்துகின்றனர்.



# பாடியநல்லூர் ஊராட்சியில் கரூர் கூட்ட நெரிசலில் இறந்தவர்களுக்கு முதலாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

மாதவரம், செப்.30-

மாதவரம் தொகுதி பாடியநல்லூர் ஊராட்சியில் கரூர் தவெக கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேரின் முதலாமாண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட தவெக சார்பில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் 41 பேரின் உருவப் படங்கள் பொறிக்கப்பட்ட பதாகை முன்பு திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எல் விஜய் பிரபு தலைமையில் மலர் தூவி மெழுகுவர்த்தி ஏந்தி கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். இதில் தவெக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் நேற்று மண்டலம்-3, வார்டு-44, கரட்டாங்காடு பகுதியில் உள்ள வீடுகளில் தூய்மை பணியாளர்கள் பொதுமக்களிடமிருந்து மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் உலர் கழிவுகள் என தரம் பிரித்து வாங்கப்படுவதை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்க்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.




# NIRS-IVUS சிகிச்சையில் 100 செயல்முறைகள்: மீனாட்சி மருத்துவமனை புதிய மைல்கல்!

மதுரை, செப்,30 -

தென்தமிழகத்தின் முதன்மை மருத்துவமனையான மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை (MSSH) மதுரை அதிநவீன NIRS மற்றும் MUS ஒருங்கிணைந்த இமேஜிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 100 இதய தமனி (கரோனரி சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து மேம்பட்ட இதய சிகிச்சையில் ஒரு முக்கிய சாதனையை நிகழ்த்தியுள்ளது, இது குறித்து செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது அதில் மருத்துவமனையின் இண்டர்வென்ஷனல் இதயவியல் சிகிச்சைப் பிரிவின் இயக்குநர் S. செல்வமணி கூறுகையில் ஒரு ரத்தக்குழாய் அடைப்பை ஆஞ்சியோகிராம் காட்டும் தோற்றத்திற்கும் அப்பால் சென்று பார்க்க மருத்துவருக்கு உதவுவதே NIRS-IVUS தொழில்நுட்பத்தின் சிறப்பாகும். NUS ரத்தக்குழாய் மற்றும் அடைப்பின் அமைப்பு பற்றிய தகவல்களை வழங்குகிறது NIRS, அடைப்பில் உள்ள கொழுப்பின் அளவு பற்றிய தகவலை சேர்த்து தருகிறது இந்த இரண்டு தகவல்களும் இணையும் போது நோயாளிகளின் இதய நோய் குறித்த முழுமையான சித்திரம் நமக்குக் கிடைக்கிறது,இதய இரத்தக் குழாய்களில் உள்ள கால்சியம் படிந்த சிக்கலான அடைப்புகளில் ஸ்டெண்ட் பொருத்துவதும் அதை விரிவாக்குவதும் மிகவும் சவாலானது அத்தகைய சூழநிலைகளில் IMUS பெரிதும் உதவியாக இருக்கும் ரத்தக்குழாயின் அளவு மற்றும் அடைப்பின் தன்மையைத் தீர்மானிக்கவும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கும் இரத்த நாளத்திற்குள் படம் பிடிக்க இந்த உத்தி உதவுகிறது என்றார். இதில் இதயவியல் மருத்துவக் குழுவின் இன்டர்வென்சனல் இதயவியல் துறை இயக்குநர் S .செல்வமணி துறைத் தலைவர் மற்றும் ஸ்ட்ரக்சுரல் இன்டர்வென்ஷன்ஸ் இயக்குநர் R. சிவக்குமார், அகாடெமிக்ஸ் இயக்குநர் N கணேசன், குழந்தைகளுக்கான இதயவியல் தலைவர் எலக்ட்ரோபிசியாலஜி தலைவரும் முதுநிலை நிபுணர் ஜெயபாண்டியன், இதய சம்பத்குமார். மயக்கமருந்தியல், தீவிர சிகிச்சை பிரிவின் தலைவர் S குமார், மருத்துவ இயக்குநர் ரமேஷ் அர்த்தநாரி மற்றும் திலீப் பெர்னார்ட் ஆகியோர் பங்கேற்றனர்.





# செங்குன்றத்தில் வக்பு வாரியத்திற்கு சொந்தமான சுமார் 22 ஏக்கர் சொத்துக்கள் கண்டறியப்பட்டு நோட்டீஸ் ஒட்டும் பணிகள் தீவிரம்

மாதவரம், செப்.30

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிக்குப்பம் பேரூராட்சிக்குட்பட்ட துருக்கன் சத்திரம் டிரஸ்ட் என்ற அறக்கட்டளையின் கீழ் சுமார் 22 ஏக்கர் அளவில் சொத்துக்கள் இருந்து வந்தன. சுமார் 1000க்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள், வணிக நிறுவனங்கள் பல ஆண்டுகளாக இங்கு உள்ளன. இந்நிலையில் அண்மையில் தனிநபர் சிலர் இந்த சொத்துக்களை ஆக்கிரமிக்க முற்பட்டதால், இவை அனைத்தும் தமிழ்நாடு வக்பு வாரியத்தின் கீழ் கொண்டு செல்லப்பட்டன. இதனையடுத்து தமிழ்நாடு வக்பு வாரிய தாசில்தாரும் நிர்வாக அலுவலருமான காமில்அப்துல் சத்தார், உதவி செயலாளர் அப்துல் வஹாப், மதுரை வக்பு வாரிய சூப்பிரண்டட் காதர் ஷெரீஃப் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் அங்குள்ள மஸ்ஜிதே ஆயிஷாவுக்குச் சென்று ஆவணங்களை சரி பார்த்தனர்.

தொடர்ந்து இந்த நிலங்களை பயன்படுத்திவரும் வாடகைதாரர்களிடம் இருந்து தரை வாடகையை வசூலித்து கொண்டு அதற்கான ரசீது வழங்கினர். மேலும் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள கட்டிடங்களுக்கு வக்பு வாரியத்தின் சொத்துக்கள் என நோட்டீஸ் ஒட்டும் பணிகளை மேற்கொண்டனர்.

வக்பு வாரியத்திற்கு சொந்தமான இடங்களை தனி நபர் யாரும் சொந்தம் கொண்டாட முடியாது எனவும் அத்துமீறுபவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என வாசகங்களுடன் நோட்டீஸ் ஒட்டி வருகின்றனர்.

# திமுக நிர்வாகப் பொறுப்புகளில் ஆதிதிராவிடர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க கோரிக்கை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர் பொறுப்புகள் வழங்க வேண்டும் கிருஷ்ணசாமி பேச்சு

தாராபுரம், செப்.30-

திமுகவின் மாவட்டச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், நகரச் செயலாளர் மற்றும் பேரூர் கழகச் செயலாளர் உள்ளிட்ட நிர்வாகப் பொறுப்புகளில் குறிப்பிட்ட சதவீதத்தை ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகளுக்கு வழங்க வேண்டும் என திமுக ஆதிதிராவிடர் நலக்குழு மாநிலச் செயலாளர் கிருஷ்ணசாமி வலியுறுத்தியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் சிவகங்கை, மதுரை, கரூர், திண்டுக்கல், திருப்பூர், கோவை, திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த திமுக ஆதிதிராவிடர் நலக்குழு மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.




கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாகை ஏ.கே.எஸ். விஜயன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அரசு கொறடாவுமான மருதூர் இராமலிங்கம் ஆகியோர் தலைமை வகித்தனர். திமுக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி. இராஜன், சேர்மன் மாரியப்பன் கென்னடி, முன்னாள் வாரியத் தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, மருத்துவர் இந்திராணி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக திமுக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, வெள்ளக்கோவில் மு.பெ. சாமிநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் பேசிய கிருஷ்ணசாமி, தாராபுரம் இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யாவுக்கு ஆதரவாக பணியாற்ற வேண்டும் என கட்சி நிர்வாகிகளிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும், திமுகவின் மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழகச் செயலாளர் உள்ளிட்ட நிர்வாகப் பொறுப்புகளில் குறிப்பிட்ட சதவீதத்தை ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கு வழங்க வேண்டும் என ஏற்கனவே நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கட்சித் தலைமையிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதாக கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

கூட்டத்தில் சிவகங்கை மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாவட்ட த் தலைவர் கொத்தமங்கலம் சேது உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161